1975 மார்ச் 21]

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, குற்ற இலாக்கா சப்-இன்ஸ்பெக்டர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது நேரடியாக எத்தனை சதவிகிதம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ? அந்த இலாக்காவில் கீழ் மட்டத்திலே பணிபுரிடவர்களுக்குப் வி உயர்வு கொடுப்பதன் மூலம எத்தனை சதவிகிதத்தினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ? மாவட்ட ரீதியாகத் தேர்வு நடைபெறுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் தொடக்கக் கேள்விக்கு அளித்த பதிலிலிலேயே அதை நான் குறிப்பாகச் சொல்லியிருக்கிறேன். இந்தக் குற்றப் புலன் ஆய்வுத் துறைக்கு நேரடியாக யாரையும் நியமிப்பது இல்லை. ஏற்கனவே உள்ள சப்-இன்ஸ்பெக்டர்களிலிருந்து தேர்ந்தெடுத்து, அங்கிருந்து இந்தத் துறையில் பயன்படுத்திக் கொள்கிறோமே தவிர நேரடியாகத் தேர்வு செய்யவில்லை. மாவட்ட ரீதியாகக் கேட்டார்கள். அதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், அவையிலே வைக்கின்ற அந்த ஏட்டிலேதான் அவ்வளவையும் வைக்க முடியும்.

## செல்வபுரத்தில் காவல் நிலையம்.

* 402 வின—திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகரம், செல்வபுரத்தில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, போலீஸ் அவுட் போஸ்டாக இருக்கும் அத்தனையையும் ஸ்டேஷன்களாக மாற்ற வேண்டுமென்ற பரிந்துரை போலீஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் இருந்ததே, அதை எந்த அளவில் அமல் செய்வதற்கு அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பரிந்துரைகள் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவுட்-போஸ்ட்களும் ஸ்டேஷன்களாக ஓரளவு மாற்றப்பட்டிருக்கின்றன. இன்னும் முழுமையாக மாற்றப்படவில்லை.

THIRU P. SEENIVASAN: I am sorry to be alittle out of the way. இப்பொழுதுள்ள போலீஸ் நிலையங்கள் அனைத்திலும்-அவுட் போஸ்ட் தவிர, மற்ற எல்லா ஸ்டேஷன்களிலும்-டெலிபோன் வசதி செய்ய உறுதி கூறியிருப்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : உறுதி கூறியிருக்கிறது. இதிலே அந்த விவரங்கள் இல்லாவிட்டாலும் என்னுடைய நினைவிலிருந்து சொல்கிறேன், சுமார் 500-க்கு மேற்பட்ட நிலேயங்களில் தொலேபேசி வைக்கப்பட்டு விட்டதாக அறிகிறேன். சரியான புள்ளிவிவரம் இல்லே.

திரு. கோவை செழியன் : தலேவர் அவர்களே, இப்படிப் புதிதாக அமைக்கப்படும் காவல் நிலேயங்களில் பணியாற்றும் காவலர்கள் மற்றும் இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்களுக்கெல்லாம் குடியிருக்க குவார்ட்டர்ஸ் கட்டி அந்த வசதிகளேச் செய்த பிறகு இந்தக் காவல் நிலேயங்களுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறதா ? அல்லது காவல் நிலேயங்களேத் திறந்ததற்குப் பிறகு அவரவர்கள் இஷ்டத்திற்கு எங்கேயாவது குடியிருந்துகொள்ள வேண்டுமென்று விட்டிருக்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : தலேவரவர்களே, இன்றியமையாத இடங்களில் முதலில் தேவைப்படுவது காவல் நிலேயங்கள் தானே தவிர காவலர்களுக்கான குடியிருப்புகளாக இல்லே. காவல் நிலேயங்களேத் தொடங்கிவிட்டு, பிறகு காவலர்கள் வாடகை வீடுகளிலே குடியிருந்தாலும், பிறகு அவர்களுக்கு வீடுகளே அமைத்துத் தருவதில் அரசு கவனம் செலுத்துகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலேவரவர்களே, இப்பொழுது பல்வேறு போலீஸ் நிலேயங்களில் போதுமான போலீஸ்காரர்களும் இல்லே. சில போலீஸ் ஸ்டேஷன்களில்....................... (மணியடிக்கப் பட்டது.)

**MR. DEPUTY SPEAKER**: How is it relevent ?

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்பொழுது திறக்கப்போகும் செல்வபுரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு உடனடியாக சப்-இன்ஸ்பெக்டர் சார்ஜ் எடுக்கும் முறையில் போலீஸ் அதிகாரிகளே நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : இப்பொழுது திறக்கப்போகின்ற செல்வபுரம் போலீஸ் ஸ்டேஷன் என்று அவராகவே உறுதிப்படுத்துகிருர்கள். செயற்குறிப்பு உண்டா என்ற கேள்விக்கு ஆம் என்பது பதில். கேள்வி கேட்ட உறுப்பினர் அதைப் பற்றிய விவரம் கேட்கவில்லே. ஆகவே, அது பரிசீலனேயில் தான் இருக்கிறது. இப்பொழுதே போதுமான காவலர்கள் எல்லா நிலேயங்களிலும் இருக்கிருர்கள். சென்னே நகரைப் பொறுத்தவரையில், 1 இன்ஸ்பெக்டர், 1 சப்-இன்ஸ்பெக்டர், 3 அல்லது 4 தலேமைக் காவலர்கள், 40 அல்லது 45 காவலர்கள் இருக்கிருர்கள். மாவட்டங்களிலும்: பிற இடங்களிலும் பொறுத்தவரையில் 1 சப்-இன்ஸ்பெக்டர், 2 தலேமைக் காவலர்கள், 20 அல்லது 25 காவலர்கள் இருக்கிருர்கள்.

1975 மார்ச் 21]

திரு. செ. அரங்கநாயகம் : புதிதாகத் திறக்கப்பட இருக்கும் செல்வபுரம் நிர்வாக எல்லைக்குள் பக்கத்தில் அதையொட்டி இருக்கும் குமாரபுரம் பஞ்சாயத்து பகுதிகளும் சேர்க்கப்பட்டு திறப்பதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்னிடம் உள்ள விவரப்படி கோவை நகரம் செல்வபுரம் பகுதியில் தனியாகப் போலீஸ் ஸ்டேஷன் அமைக்க வேண்டுமென்று திரு. எஸ். ஏ. இராசமாணிக்கம், எம்.எல்.சி. ஒரு கோரிக்கையை விடுத்திருக்கிறார். அந்தக் கோரிக்கையின்மீது ஐ.ஜி. அவர்களுடைய கருத்து கேட்கப்பட்டது. ஐ.ஜி. அவர்கள் அந்த ஸ்டேஷன் தேவைதான் என்று பரிந்துரை செய்துள்ளார். புதிய குடியிருப்புகள் என்ற அளவுக்கு நிறைய மக்கள் தொகை பெருக்கம் இருக்கிறது. ஆகவே, அது தேவை என்று பரிந்துரைத்துள்ளார். நிதி நிலையை உத்தேசித்து இந்த ஆண்டிலேயே திறக்கலாமா அல்லது கொஞ்சம் தள்ளிப்போடலாமா என்று அரசு யோசித்து வருகிறது.

திரு. என். மருதாசலம் : கோவை செல்வபுரத்தில் ஹவுசிங் யூனிட் போலீஸ் ஸ்டேஷன் திறக்கப்படவேண்டுமென்று அந்தப் பகுதி முஸ்லிம் கள் ஜம்மாவிலிருந்து அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா ? இதற்கு முன்னாலேயே விண்ணப்பம் எழுதியதற்கு "இல்லை" என்று பதில் அனுப்பியிருக்கிறார்கள். தற்போது அதிகமான கேஸ்கள் அந்தப் பகுதியில் வருவதாலும், பல்வேறு பட்டவர்கள் அதிக அளவில், குடியிருப்பதாலும் உடனடியாக ஒரு போலீஸ் ஸ்டேஷனை அங்கு திறக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலிலே சொன்ன விடையிலேயே இவை எல்லாம் அடங்கியிருக்கின்றன.

திரு. கே. ஏ. வகாப்; இப்படிப்பட்ட காவல் நிலையங்கள் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகின்றன? மக்கள் தொகையின் அடிப்படையிலா? குற்றங்களின் அடிப்படையிலா? அரசியல் கட்சிகள் நடத்துகிற போராட்டங்களின் அடிப்படையிலா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் கேள்வியாக கேட்ட எல்லா அடிப்படையிலும்.

திரு. தி. பொன்னுமலை: சில கிராமங்களிலே போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றனவே தவிர காவலர் இல்லங்கள் இல்லாமல் அவதிப் படுகிறார்கள். ஏற்காடு போன்ற மலைப் பகுதிகளில் குடியிருப்புக்கு வசதிகள் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு குவார்ட் டர்ஸ் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கனவே சொன்னேன். காவலர்கள் குடியிருப்புக்காக அரசு கணிசமான தொகையை ஒதுக்கி ஆவன செய்து வருகிறது. படிப்படியாகச் செய்யப்படுகிற காரியங்களில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இடங்களும் விரைவில் இடம் பெறும்.